**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 180/2018 | Date | : 20.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : குபேந்திரன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.02.2026

( எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது தருமபுரி மாவட்டம், அ.பள்ளிபட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.03.2018ம் தேதி கோயம்புத்தூர் அறிவுசார் சொத்துரிமைகள் அமலாக்கப் பிரிவு அலுவலகத்தில் பணிபுரிந்தபோது, சிவனேசன் அன்ட் கோ, சென்னை கம்பெனி மேனேஜர் மணிகண்டராஜா என்பவர் காலை 08.30 மணிக்கு நிலையம் ஆஜராகி கடந்த 16.12.2017ம் தேதி ஈரோடு மாவட்ட பகுதிகளில் அவர் கம்பெனியின் பெயரில் போலியான புராடக்ட்களை விற்பனை செய்கிறார்களா என விசாரித்தபோது, ஈரோடு கொல்லம்பாளையம் ஜீவானந்தம் வீதி, நெ.1369/1ல் அமைந்தள பூஜா இம்பேக் என்ற கம்பெனியின் Prashanth PREMIER பெயரில் போலியான குக்கர்களை விற்பனை செய்வதாக கூறி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.82/2018, காப்பிரைட் உரிம சட்டம் 51 r/w 63(a) of Copy Right Act 1957 and 420 IPC Actன் படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார்.

2. பின்னர் இவ்வழக்கை காவல் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு என்னையும், வாதி மற்றும் தலைமை காவலர் 1335 திரு. சிவக்குமார் ஆகியோருடன் 17.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று முறைப்படி அறிவிப்பு செய்து சோதனை செய்தபோது, பின்னர் எதிரியானவர் தன் கடையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த போலியான பிரிமியர் என்ற பெயரில் Duplicated Prashanth Premier Cooker – 12 ltr – எண்ணிக்கை – 23, Duplicated Prashanth Premier Cooker – 3 ltr – எண்ணிக்கை– 57, Duplicated Prashanth Premier Cooker – 12 ltr Bottom – எண்ணிக்கை– 15, Duplicated Prashanth Premier Cooker – 5 ltr Bottom – எண்ணிக்கை– 15, மற்றும் பிரசாந்த் பிரிமியர் டை ஒரு செட் ஆகியவற்றை மகஜரில் 18.00 மணிமுதல் 18.30 மணிவரை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

3. பின்னர் எதிரியின் கைதுக்கான காரணம் கூறி 19.00 மணிக்கு எதிரியை கைது செய்து, எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 19.15 மணிமுதல் 19.45 மணிவரை எங்கள் முன்னிலையில் பெற்றிர்கள். மேற்கண்ட கைப்பற்றுதல் மகஜரிலும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சிகளாக நானும், என்னுடன் பணிபுரிந்த தலைமை காவலர் 1335 திரு.சிவக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ. 4 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் எதிரி மற்றும் தடையங்களுடன் 21.45 மணிக்கு நிலையம் வந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்தவற்றை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

1. வாதியை புகார் கொடுக்க நாங்கள் அழைத்தோமா இல்லை அவர் தாமாக வந்தாரா என்றால் அவர் தாமாக வந்தார். அந்த சமயத்தில் சேலம் காவல் ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு வகித்தார் என்றால் சரிதான். வாதி புகார் கொடுப்பதற்கு முன்பு இந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோவையில் இருந்து

ஈரோட்டுக்கு எப்போது புறப்பட்டோம் என்றால் காலை சுமார் 09.30 மணிக்கு புறப்பட்டோம். நேராக பூஜா இம்பேக் நிறுவனத்திற்கு சென்றோமா என்றால் ஆமாம். மேற்படி நிறுவனம் இருந்த இடம் ஈரோடு மாநகராட்சி எல்லைக்கு உட்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி நிறுவனம் இருந்த இடம் பொது ஜன நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான்.

2. மேற்படி நிறுவனம் தனிநபருக்கு சொந்தமானதா அல்லது கூட்டாண்மை நிறுவனமா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் இல்லையென்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.02.20 17:19:27 -0800

Judicial Magistrate No.III,

Erode.